(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 11(6).]

# பாராளுமன்றம்

## 11 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 யூன் 20 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2014 யூலை 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3271/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை மூலம் ஈட்டிய வருமானத்தினை வெவ்வேறாகவும் ;

(ii) குறிப்பிட்ட அதிவேக நெடுஞ்சாலையில் இதுவரை பயணித்துள்ள கார்களின் எண்ணிக்கையையும்;

(iii) இந்த அதிவேக நெடுஞ்சாலையில் இதுவரை நிகழ்ந்துள்ள விபத்துகளின் எண்ணிக்கையினையும்;

(iv) ஏதேனும் காரணத்தினால் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை மூடப்பட்டதா என்பதையும்;

(v) அவ்வாறாயின், மூடப்பட்டமைக்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 சனவரி 29 ஆம் திகதிய 1847/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 128 அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 பெப்புருவரி 06 ஆம் திகதிய 1848/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.06.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியுடனும் 39 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் (2) ஆம் உட் பிரிவின் (ஈ) ஆம் பந்தியின் கீழ் சூழல்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2012 ஓகத்து 15 ஆம் திகதிய 1771/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடுப்புச் சட்டத்தின் 27 ஆம் 28 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 யூன் 28 ஆம் திகதிய 1816/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் 2013 செத்தெம்பர் 27 ஆம் திகதிய 1829/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்டதும் 2014.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## 2014 யூலை 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4486/ ’13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வருடாந்தம் சிலாபம் கழிமுகத்தில் இயற்கையாக மணல் நிரம்புவதன் காரணமாக அப் பிரதேச மீனவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள் என்பதையும்;

(ii) கழிமுகத்தில் மணல் நிரம்புவதால் ஏற்கனவே படகுகளை கடலில் செலுத்தும்போது ஏற்படும் விபத்துகளால் பல உயிரிழப்புகளும் படகுகள் அழிவுறுதலும் இடம்பெற்றுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சிலாபம் கழிமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக தற்போது ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா;

(ii) சிலாபம் கழிமுகத்தில் மணல் நிரம்புதல் தொடர்பில் தகுந்த பரிசோதனையொன்றை மேற்கொண்டு இது தொடர்பாக நிரந்தர தீர்வொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) அத்தகைய நடவடிக்கைகள் மூலம் குறிப்பிட்ட கழிமுகத்தை அபிவிருத்தி செய்ய எவ்வளவு காலம் செல்லும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2014 யூலை 10, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

4738/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறு வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகளுக்கும் தெரிவு செய்யப்படுகின்ற பாடசாலை மாணவர்களை, குறித்த போட்டிகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான ஒழுங்கானதொரு வேலைத்திட்டம் இல்லை என்பதையும்;

(ii) இந்த நிலைமையின் கீழ், வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்படும் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்படும் மாணவர்களை, குறித்த போட்டிகளுக்காக அனுப்பி வைப்பதற்கென ஏதேனும் நிதியம் ஒன்றை தாபிக்கும் திட்டமொன்று உள்ளதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4846/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பின்வரும் மூன்று வகுதிகளின் கீழ் அதாவது முகவர்களின் மூலமாக, நேரடி ஒளிபரப்பு வசதிகள் வழங்குவதன் மூலமாக, மற்றும் நேரடி ஒளிபரப்பு வசதி இன்றி "பந்தயம் பிடித்தல்" வியாபாரத்தை மேற்கொள்வதற்காக உண்ணாட்டு அரசிறைத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட இடங்கள் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை வருட ரீதியாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதிவும் இடம் பெற்றிருப்பது எந்த ஆட்கள் அல்லது கம்பனிகளின் பெயரின் கீழ் என்பதையும்;

(iii) மேற்படி பதிவு செய்தல்களில் ஏதாவதொரு பதிவு ஏதாவதொரு கம்பனியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த கம்பனியின் பணிப்பாளர்களது பெயர்கள் யாவை என்பைதையும்;

(iv) மேலே (i ) இல் குறிப்பிட்ட மூன்று வகுதிகளின் கீழ் ஒன்று திரட்டப்பட்ட அறவீட்டின் அளவை 2005 - 2013 ஆம் ஆண்டு வரை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2014 யூலை 11, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4847/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சூதாட்ட வியாபாரத்தை மேற்கொள்வதற்கு இது வரைக்கும் விநியோகிக்கப்பட்டள்ள உரிமங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய உரிமங்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்கள் மற்றும், அல்லது கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) அவ் உரிமங்கள் ஒவ்வொன்றும் வழங்கப்பட்ட திகதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4851/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 முதல் 2013 வரை,

(i) "Rudjino"வினால் வேறாக்கப்பட்ட சூதாட்ட வணிகத்தை நடாத்துவதற்கு உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) மேற்படி பதிவுகள் எக்கம்பனிகளின் அல்லது நபர்களின் பெயர்களின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கம்பனியினதும் பணிப்பாளர்களது பெயர்களையும்;

(iv) "Rudjino"விடமிருந்து வருடாந்தம் மொத்தமாகச் சேர்க்கப்பட்ட அறவீடுகளை வெவ்வேறாகவும்

இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2014 யூலை 22, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2224/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலலோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக்-ஹிதட செவனக்" வேலைத் திட்டத்தின் கீழ், குருநாகல், அனுராதாபுரம், கண்டி ஆகிய மாவட்டங்களில் வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கென்றே 15000 வீடுகளைக் கொண்ட மூன்று புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த வீடமைப்புக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நகரங்கள் யாவை என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3248/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைச் சுங்கம் தொடர்பாக,

(i) 2012ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3708/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை சனாதிபதியவர்களுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள இணைப்புச் செயலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இன்றைய சனாதிபதியவர்களின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள இணைப்புச் செயலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி இணைப்புச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள துறைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு செயலாளரினதும் பெயர், கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் தனித்தனியே யாவையென்பதையும்;

(v) ஒரு இணைப்புச் செயலாளருக்கு செலுத்தப்படும் சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் பெற்றுக்கொடுக்கப்படும் வசதிகள் யாவை என்பதையும்;

(vi) இதற்கமைய இணைப்புச் செயலாளர்களுக்காக கடந்த 3 வருடங்களில் ஏற்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(vii) மேற்படி செலவினத்துக்கு ஒப்பீட்டளவில் போதியளவு கடமைப் பொறுப்பொன்று இச் செயலாளர்களினால் ஆற்றப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3831/ '13

கௌரவ புத்திக பத்திரண,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் முலடியன - கொட்டபொல வீதியை விஸ்தரிக்கும் கருத்திட்டம் தற்போது செயற்படுத்தப்படுகின்றதை அறிவாரா என்பதையும்;

(ii) இவ்வீதிக்கு நிதியுதவி பெறப்படும் மூலங்கள் யாவையென்பதையும்;

(iii) இதற்கென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகைக்கு மேலதிகமாக இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) முலடியன - கொட்டபொல வீதி விஸ்தரிப்பின் போது சுவீகரிக்கப்பட்ட சுவர்ணபூமிக் காணிகள் மற்றும் உரித்துரிமைக் காணிகள் தொடர்பில் மேற்படி காணி உரிமையாளர்களுக்கு எதுவித நட்ட ஈடும் செலுத்தாமல் வீதியின் எஞ்சிய வேலைகள் நடைபெறுகின்றதென பிரதேச மக்கள் குறைகூறுவதை அறிவாரா என்பதையும்;

(ii) வேறு வீதிகளை விஸ்தரிக்கும் போது உரிய சாராருக்கு நட்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு மேற்குறிப்பிட்ட வீதி தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இது தொடர்பாக மீளாய்வு செய்து குறிப்பிட்ட காணிச் சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3906/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்திற்குரிய கரையோரப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள "குலாரிப்பு" வனப் பாதுகாப்புப் பிரதேசம், மாங்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரசாங்க வனப் பிரதேசமான "மட்டுசுட்டான்" மற்றும் மன்னார் மாவட்டத்தின் "முசலி", "மடு" மற்றும் " மாந்தை மேற்கு" ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் உரிய வனப் பாதுகாப்புப் பிரதேசங்களில் பெருமளவு ஏக்கர் வனங்கள் வெட்டித் துப்பரவு செய்யப்படுகின்றனவா;

(ii) மேற்படி ஒவ்வொரு வனப் பிரசேத்திலிருந்தும் தற்போது வெட்டித் துப்பரவு செய்யப்பட்டுள்ள நிலப் பரப்புகளின் அளவு வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி வனப் பிரதேசங்களை வெட்டித் துப்பரவு செய்வதன் நோக்கம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4289/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் பிரதானமானதொரு அரச வங்கியான மக்கள் வங்கி எதிர் நோக்கியுள்ள நிதி நெருக்கடி காரணமாக மேற்படி வங்கியின் பங்கு விநியோகமொன்றை மேற்கொள்வதற்கு 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதியன்று அமைச்சரவைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரகாரம் பங்குச் சந்தையில் மேற்படி வங்கியின் பங்கு விநியோகத்தை மேற்கொள்ள முடியாதென்பதால் மேற்படி வங்கிச் சட்டம் திருத்தப்படுமா என்பதையும்;

(iii) மக்கள் வங்கியினால் பங்குச் சந்தைக்கு விநியோகிக்கப்படும் பங்குகளை கொள்வனவு செய்வதற்கு தனியார் துறையினருக்கு வாய்ப்புக் கிடைப்பதால் மேற்படி வங்கியின் உரிமை அரச கட்டுப்பாட்டிலிருந்து விலகிச் செல்கின்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4442/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'தயட்ட கிருள' 2014 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரிக்கு பெற்றுக் கொடுத்த வசதிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக செலவிட்ட நிதி ஏற்பாடுகளின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நவீனமயமாக்கல் பணிகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் 2014 'தயட்ட கிருள' கண்காட்சி ஆரம்பிக்கப்பட முன்னர் பூர்த்தி செய்யப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4558/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வீடொன்று இல்லாத, குறைந்த வருமானம் பெறும், வெளிநாட்டில் தொழில்புரிகின்ற ஊழியர்களுக்காக "ரட்டவிருவோ கடன் திட்டம்" என்ற பெயரில் வீடமைப்புக் கடன் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி கடனை வழங்குகின்ற வங்கி யாது;

(iii) நாட்டினுள் இயங்கி வருகின்ற அந்த ஒவ்வொரு வங்கிக் கிளைகளினதும் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) மேற்படி கடன் திட்டம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏனைய நிருவாக நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவு எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் தொகையொன்றை பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் தகைமைகள் யாவை;

(ii) ஒருவருக்கு வழங்கப்படும் கூடியபட்ச கடன் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி கடன் தொகைக்காக அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வளவு;

(iv) இதுவரை மேற்படி கடன் தொகைக்கு விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4567/ '13

கௌரவ துனேஷ் கங்கந்த,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 18 வயது தொடக்கம் 22 வயது வரையான ஒவ்வொருவருக்கும் தமது விருப்பின் பிரகாரம் தேவைப்படுகின்ற மூன்றாம்நிலைக் கல்வியை அல்லது பயிற்சியை பெற்றுக்கொள்வதற்காக ரூபா இரண்டு இலட்சம் வரையான பணத் தொகையொன்றை ஒதுக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இற்றைவரை இந்த வசதியைப் பெற்றுக்கொண்டுள்ள இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி நிதி வசதியைப் பெறுவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை யாதென்பதையும்;

(iv) வழங்கப்படும் பணத் தொகை மீள அறவிடப்படுமா என்பதையும்;

(v) அப் பணத்தொகை மீள அறவிடப்படுமெனின், மேற்படி பணத் தொகையைப் பயன்படுத்தி பெறப்படுகின்ற கல்வி அல்லது பயிற்சி முடிவடைந்து எவ்வளவு காலத்தின் பின்னர் அது அறவிடப்படும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இற்றைவரை மேற்படி வசதியை வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லையெனின், மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கின் மூலம் மேற்படி இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்படி வாக்குறுதியை யதார்த்தமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4586/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நுரைச்சோலையை மின் உற்பத்தி நிலையத்தில் பயன்படுத்துவதற்காக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி இறக்குமதி தொடர்பாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி இறக்குமதியுடன் தொடர்புபட்ட நிலக்கரியின் அளவை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விடயம் குறித்து ஏன் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேற்படி நிலக்கரித்தொகுதி இறக்குமதியாளரின் பெயர் என்னவென்பதையும்;

(ii) சொல்லப்பட்ட இறக்குமதியாளர் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார் என்பதையும்;

(iii) இறக்குமதியாளரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்னவென்பதையும்;

(iv) எதிர்காலத்தில் நிலக்கரி இறக்குமதி தொடர்பில் இவ்வாறான நிகழ்வு இடம்பெறுவதைத் தவிர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4746/ '14

கௌரவ அஷோக் அபேசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டம் அடைவதற்கு ஏதுவாயமைந்துள்ள விடயங்கள் யாவை என்பதையும்;

(ii) சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) 2011 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வருடாந்தம் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் அளவு எவ்வளவென்பதையும்;

(v) மசகு எண்ணெய் இறக்குமதி குறைவடைந்தமையால் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுகின்றமையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4796/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சினால் இத்தாலியில் ஹோட்டல் துறையில் தொழில் வாய்ப்புக்களுக்காக இலங்கையர்கள் அனுப்பப்பட்டார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு அனுப்பப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதை அவர் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) மேற்படி குழுவினரைத் தேர்ந்தெடுப்பதற்காக பத்திரிகை விளம்பரங்கள் அல்லது வேறு பிரச்சார வழிமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில் அவை யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4809/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆரச்சிகட்டுவ பிரதேச சபைக்கு சொந்தமான குகல கிராமத்துக்கு விநியோகிக்கப்படுகின்ற குடிநீர் தொடர்பாக பிரச்சினையொன்று உள்ளதென்பதையும்;

(ii) இதுவரை விநியோகிக்கப்பட்ட குடிநீரில் இரும்புத்தாது கலந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றார்கள் என்பதையும்;

(iii) இந்நிலைமையின் கீழ் தற்போது ரூபா 35 செலுத்தி குடிநீர் கலனொன்றை கொள்வனவு செய்ய நேர்ந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) குகல கிராமத்தில் குடிநீர் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குரிய நிலைமையை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4843/ '14

கௌரவ ஆர். எம். ரஞ்ஜித் மத்தும பண்டார,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் படல்கும்புர, மெதகம, மொனராகலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு எல்லையாக ஓடுகின்ற "கும்புக்கன் ஓயா" வுக்கு குறுக்காக "நக்கல நீர்த்தேக்கம்" என்ற பெயரில் நீர்ப்பாசனக் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி நீர்ப்பாசனக் கருத்திட்டத்திற்கு நிதி முதலீடு செய்யும் நிறுவனம் யாது என்பதையும்;

(iii) இந்த நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கின்ற நோக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நக்கல நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் போது அதற்கு உட்படுகின்ற மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக ஒதுக்கப்படுகின்ற பிரதேசத்திலிருந்து அகற்றப்படுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக சுவீகரிக்கப்படுகின்ற சகல காணிகளுக்கும் அவற்றின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4869/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிலக்கீழ் நீர் அமிலத் தன்மைக்கு உள்ளாகியுள்ளதால் தமது நீர்த் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் உள்ள ரத்துபஸ்வல மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளின் மக்களுக்கு குழாய் நீர் வழங்கப்படும் திகதி யாது;

(ii) இதற்காக நீர் பாவனையாளர்களிடமிருந்து ஆரம்பத் தொகையொன்று அறவிடப்படுமா;

(iii) ஆமெனில் அப் பணத்தொகை எவ்வளவு;

(iv) தற்போது நீர்க் குழாய்கள் இடப்பட்டுள்ள வீதிகளுக்கு மேலதிகமாக ஏனைய இடை வீதிகளிலுள்ள வீடுகளுக்கு நீர் வழங்குகின்றபோது ஆரம்பத் தொகைக்கு மேலதிகமாக வேறு பணத்தொகை அறவிடப்படுமா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ரத்துபஸ்வல மற்றும் சுற்றுப்புறப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு குழாய் நீர் வழங்கும் திட்டம் பூர்த்தியடையும்வரை அந்த மக்களுக்குத் தேவையான குடிநீரை தொடர்ச்சியாக பவுசர்கள் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2014 யூலை 22, செவ்வாய்க்கிழமை)

4559/ '13

கௌரவ மொஹமட் அஸ்லம்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி, தண்டனை விதிக்கப்பட்ட நீதி மன்றம், தண்டனை விதிக்கப்பட்ட திகதி மற்றும் வழக்கு இலக்கம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மரண தண்டனை பெற்றுள்ள மேற்கூறிய நபர்களில் அரசியலமைப்பினால் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், அத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அதற்குரிய திகதிகள் யாவை என்பதையும்;

(ii) 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை மற்றும் 2012.06.01 ஆம் திகதி தொடக்கம் இற்றை வரையான காலப்பகுதியில் சனாதிபதியவர்களின் மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் விடுதலை செய்யப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2014 யூலை 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2581/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

மாவட்ட வாரியாக வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்டுள்ள மின்சார வசதியற்ற கிராமங்களுக்கு எக்காலப்பகுதியில் மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்;

(ii) 2012ஆம் ஆண்டினுள் வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்கக் கூடிய இயலுமை காணப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3249/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பாக,

(i) 2012ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்பார்த்த இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3833/ '13

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் அநுராதபுரம் மாவட்டத்தின் குளங்களிலுள்ள வண்டல் படிவை அகற்றும் கருத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) வண்டல் படிவை அகற்றுவதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் முன்வைத்த விலைகள் தனித் தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின் குளங்களிலுள்ள வண்டல் படிவை அகற்றும் பணிகளுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு இற்றை வரை பணம் செலுத்தப்படவில்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இற்றை வரை இவர்களுக்கு பணம் செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) ஒப்பந்தக்காரர்களுக்கான பணம் செலுத்தப்படுமாயின், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3940/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு 500 மீற்றர் அண்மித்ததாக நடாத்தப்பட்டு வருகின்ற மதுபான சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மதுபான சாலைகளுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மதுபான சாலைக்கான உரிமப் பத்திரம் வழங்கும் போது பாடசாலைகள், பன்சாலைகள் உள்ளிட்ட புனித தலங்களிலிருந்து மதுபான சாலைகளுக்கு இருக்க வேண்டிய திட்டவட்டமான தூரம் எவ்வளவென்பதையும்;

(iv) இத்தகைய உரிமப் பத்திரங்களை வழங்கும் போது ஆராயப்படுகின்ற ஏனைய வரையறைகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி (iii) மற்றும் (iv) வது விடயங்களில் குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு ஏற்ப தலதா மாளிகைக்கு அண்மையில் அமைந்துள்ள மேற்படி மதுபான சாலைகள் சட்டவிரோதமானவையா என்பதையும்;

(vi) இதற்கமைய, மேற்படி மதுபான சாலைகள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4104/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர்ந்தளவு உயிரியல் பல்வகைத்தன்மையைக் கொண்ட வன ஒதுக்கமான "பிதுருதலாகல" மலைத் தொடரின் மேற்குச் சரிவில் உருளைக்கிழங்குச் செய்கை மற்றும் மரக்கறிச் செய்கைக்காக பெருமளவு நிலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இவ்வாறு துப்பரவு செய்த தரப்பினர் யாவர் என்பதையும்;

(iii) இவர்களுக்கு இதற்காக அனுமதி வழங்கியவர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4333/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வாகன புகைப் பரிசோதனையை மேற்கொள்வதற்கு மேற்படி பரிசோதனையை மேற்கொள்கின்ற கம்பனிகளால் அறவிடப்பட வேண்டிய கட்டணத்தை தீர்மானிக்கும் அதிகாரி யாரென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரசாங்க நிறுவனங்களினால் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு புகைப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து வண்டிகள் மேற்படி பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனின், இலங்கை போக்குவரத்துச் சபை தமது பேருந்து வண்டிகளுக்கான புகைப் பரிசோதனையை மேற்கொள்வதற்கு வருடாந்தம் குறித்த நிறுவனங்களுக்கு செலுத்துகின்ற பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையை அவதானிப்பதன் மூலம் வாகன புகைப் பரிசோதனை திருப்தியடையக் கூடியவாறு இடம்பெறுகின்றதென்பதை உறுதிப்படுத்த முடியுமா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4443/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'தயட்ட கிருள' 2014 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக குருநாகல் மாவட்டத்தினுள் இனங்காணப்பட்ட வீடுகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் வழங்க உத்தேசிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் யாது என்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் 2014 'தயட்ட கிருள' கண்காட்சி ஆரம்பிக்கப்பட முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4569/ '13

கௌரவ துனேஷ் கன்கந்த,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் என அழைக்கப்படுகின்ற பாடசாலைகளை அவ்வாறு வகைப்படுத்துவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பிரமாணங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது காணப்படுகின்ற தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கையும் மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட முன்மொழிவுகளில் உள்ளடங்கியிருந்த மேலே குறிப்பிடப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஆண்டின் நடுப்பகுதியில் மேலதிக பாடசாலை சீருடைத் துணி, இலவசமாக ஒரு சோடி பாதணிகள் அத்துடன் தானியங்கள், முட்டை மற்றும் பாலுடன் கூடிய ஒரு வேளை உணவு வழங்கப்படுமென்ற முன்மொழிவுகளுக்கமைய மேற்படி ஒவ்வொரு வசதியையும் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இதற்காக அரசாங்கம் வருடாந்தம் செலவிடும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4584/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வெளிநாடு சென்றுள்ள ஊழியர்களின் பங்களிப்புத் தொகையில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற கட்டாய காப்புறுதித் திட்டமொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஆரம்பத்தில், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டு பிற்பட்ட காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்ட மேற்படி காப்புறுதி நடவடிக்கைகள் குறிப்பிட்ட கம்பனியினால் தரகர் நிறுவனமொன்றின் ஊடாக எம்.பீ.எஸ்.எல். காப்புறுதிக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியினால் குறிப்பிட்ட தரகர் நிறுவனத்திலிருந்து சேவைகளைப் பெறுதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) வெளிநாடு சென்றுள்ள ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிடப்படுகின்ற தவணைத் தொகையிலிருந்து அந்த தரகர் கம்பனிக்கு செலுத்தப்படும் சதவீதம் எவ்வளவு;

(iii) இன்றுவரை அந்த கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(iv) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மேற்படி காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற போது தரகர்களின் சேவை பெறப்பட்டதா;

(v) தரகர் ஒருவரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டதன் மூலம் கிடைத்த நன்மை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தரகர் சேவைகளுக்காக செலுத்தப்பட்ட கட்டணங்களைப் பெற்ற தரகர் கம்பனியின் பிரதிநிதி யார்;

(ii) அந்த பிரதிநிதி மேற்கூறிய கட்டணம் செலுத்தப்பட்ட ஒட்டுமொத்த காலகட்டம் முழுவதிலும் மேற்படி கம்பனியில் சேவையில் ஈடுபட்டிருந்தாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4744/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் உள்ள மின்சார வசதி இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மின்சார நீடிப்பு மூலம் மின்சார வழங்கலைப் பெற்றுக்கொடுப்பதற்குள்ள இடங்களுக்கு மின்சார நீடிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) குறைந்த மின்சார கொள்ளளவை கொண்டுள்ள நகரங்களின் மின்சார கொள்ளளவை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4810/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் உடப்பு மீன்பிடிக் கிராமத்தில் இறங்கு துறையொன்று இல்லை என்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களும் நோயாளர்களும் அதனூடாகப் பயணம் செய்கின்ற போது பல சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) உடப்புவில் பொருத்தமான இறங்குதுறையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4853/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்தலை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் தொடர்பாக,

(i) கடந்த 12 மாதங்களாக ஒவ்வொரு மாதமும் புறப்படுகின்ற மற்றும் அதனை வந்தடைகின்ற (இடைத்தங்கல் அல்ல) சர்வதேச விமானங்களின் எண்ணிக்கையை விமானச் சேவையின் அடிப்படையில் தனித்தனியாகவும்;

(ii) கடந்த 12 மாதங்களில் ஒவ்வொரு மாதமும் ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தை விமானச் சேவையின் அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4872/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீட்டுப் பாவனைக்கான எல்.பி. எரிவாயு விலைக் கட்டுப்பாட்டின்போது நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை, 12.5kg கொள்ளளவுடைய எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை தொடர்பில் மட்டுமே கவனம் செலுத்துகின்றது என்பதையும்;

(ii) இதன் காரணமாக 12.5kg க்கு குறைவான கொள்ளளவுடைய சிறிய சிலிண்டர்களில் எரிவாயுவை நிரப்பி அதிக விலைக்கு அவற்றை விற்பனை செய்ய எரிவாயுக் கம்பனிகள் நடவடிக்கை எடுத்துள்ளன என்பதையும்;

(iii) 12.5kg கொள்ளளவுடைய சிறிய சிலிண்டர் ஒன்றுக்காக ஒரே தடவையில் பணத்தைச் செலவிட முடியாத நிலையிலுள்ள வறிய மக்களே மேற்படி சிறிய அளவிலான எரிவாயு சிலிண்டர்களை அதிக விலையில் கொள்வனவு செய்ய முற்படுகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 12.5kg கொள்ளளவுடைய எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலைக்கு ஒப்பீட்டளவில் வீட்டுப் பாவனைக்காக பயன்படுத்தப்படும் அனைத்து சிலிண்டர்களின் விலைகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4913/ ’14

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சு மற்றும் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் அனுராதபுரம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பயணிகள் தரிப்பிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அத்தகைய பயணிகள் தரிப்பிடமொன்றுக்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி பயணிகள் தரிப்பிடங்களில் தற்போது பயன்படுத்தப்படும் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட பயணிகள் தரிப்பிடங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்களை வழங்கும் போது உரிய கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், அந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ள அடிப்படை யாது;

(iii) மேற்படி ஒப்பந்தங்களை வழங்கும் போது ஒப்பந்தகாரரிடமிருந்து அல்லது ஏற்புடைய கம்பனிகளிடமிருந்து பணம் பெறப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4948/ ’14

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டமானது தற்போது ரூபா 95 பில்லியனை விஞ்சியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் வங்கி மேலதிக பற்றுகளுக்காக மட்டும் ரூபா 43 கோடிக்கும் அதிகமான தொகையை செலுத்த வேண்டியுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது அரச வங்கிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடன் வழங்குவதை நிராகரித்துள்ளனவா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், மேற்படி நிலைமையின் கீழ் உயர் கடன் வட்டி நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு பெற்றோலியக் கம்பனிகளிலிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 யூலை 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2585/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) அரச புள்ளிவிபரங்களுக்கமைய இலங்கையில் ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு சீவிப்பதற்கு தேவைப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு உணவுத் தேவைக்கான செலவு மற்றும் உணவு அல்லாத தேவைகளுக்கான செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

(iii) ஒரு குடும்பத்துக்கு சீவிப்பதற்கு மாதாந்தம் தேவைப்படும் பணத் தொகை ஒவ்வொரு மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு சீவிப்பதற்கு ரூபா. 7500.00 போதுமானதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3250/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை தொடர்பாக,

(i) 2012ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) வைத்தியசாலையில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3834/ '13

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் 2013.03.19 ஆம் திகதி பதவியிலிருந்த தலைவர் உட்பட பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுடைய பெயர்கள், முகவரிகள், கல்வி மற்றும் ஏனைய தகைமைகள், சம்பளம் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் தனித் தனியாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள சிலர் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகியுள்ளவர்கள் என்பதையும்;

(ii) சில பணிப்பாளர்களுக்கு எதிராக தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றதென்பதையும்;

(iii) ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள சில உத்தியோகத்தர்கள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சேவைக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேலே (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலைமைகளினால் ஒட்டு மொத்த காப்புறுதிக் கூட்டுத்தாபனமே அபகீர்த்திக்கும் வீழ்ச்சிக்கும் உள்ளாகி வருகின்றதென்பதை ஏற்றுகொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிலைமையை தடுப்பதற்காக பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள பணிப்பாளர் சபை அங்கத்தவர்களையும் ஊழல்மிக்க உத்தியோகத்தர்களையும் மேற்படி கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4150/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கதிர்காமம் தம்மன்னாவையில் இரத்தினக்கல் காணி ஏலவிற்பனை இடம்பெற்றதா;

(ii) ஆமெனில், அந்த ஏலவிற்பனையின் மூலம் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் எவ்வளவு;

(iii) அப் பணத் தொகைகள் உரிய நடைமுறைக்கமைய பெற்றுக்கொள்ளப்பட்டனவா;

(iv) மேற்படி ஏலவிற்பனை தொடர்பாக மேலும் அறவிடப்பட வேண்டிய பணத் தொகைகள் உள்ளனவா;

(v) மேற்படி ஏலவிற்பனையின் போது உணவு மற்றும் தேனீருக்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4176/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கொலான்னாவ பிரதான சேவை நிலைய உபகரண வேலைத் தளத்தின் மேற்பார்வை நடவடிக்கைகள் எவ்வுத்தியோகத்தரின் கீழ் நடைபெறுகின்றதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 யூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் இவ்வேலைத்தளத்தில்,

(i) பம்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு, உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திருத்துவதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) உதிரிப் பாகங்களை விற்பனை செய்ததன் ஊடாக ஈட்டப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2013 யூன் மாதம் இறுதியளவில் இவ்வேலைத்தளத்தில் பணிபுரிந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4630/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் மெட்றிக் தொன் அரிசியை ஏற்றுமதி செய்வதற்காக 2012 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டதென்பதையும்;

(ii) இதன் பொருட்டு தெற்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வட மாகாணங்களில் 4 அரிசி ஏற்றுமதி வலயங்களைத் தாபிக்க முன்மொழியப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட அரிசி ஏற்றுமதி வலயங்களைச் சார்ந்ததாக அரசாங்கத்தினாலும் தனியார் துறையினாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றில் வரிச் சலுகையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகளின் எண்ணிக்கை யாது

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட அரிசி ஏற்றுமதி வலயங்களுக்குரிய பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் அதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள கிராமங்கள் ஒவ்வொரு வலயத்திற்கிணங்க தனித்தனியாக யாவை;

(ii) இன்றளவில் மேற்படி ஒவ்வொரு வலயத்திலிருலிருந்தும் ஏற்றுமதிக்காக கிடைக்கின்ற அரிசியின் அளவு யாது;

(iii) மேற்படி (ஆ) (i) இல் குறிப்பிடப்பட்ட மேற்படி அரிசி ஆலைகள் அமைந்துள்ள இடங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் சபா பீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4712/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (I) முருங்கன் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மலுவராயர், கட்டை அடம்பன், மடு வீதி, முருங்கன் முகவரியில் வசித்த திருமதி. மாரிமுத்து சண்முகம் மற்றும் இவரது குடும்ப அங்கத்தவர்கள் எல்.ரி.ரி.ஈ அச்சுறுத்தலினால் அவ்வீட்டை கைவிட்டுச்சென்று அகதிகளாக பிறிதொரு பிரதேசத்தில் வசித்த காலப்பகுதியில் இவர்களின் வீடு அமைந்திருந்த இடத்தில் அதிவலுவுள்ள மின்சாரக் கம்பிகளை இடுவதற்கான பாரிய மின்சாரக் கோபுரமொன்று அமைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இவர்களின் வீட்டை அகற்றி அந்த இடத்தில் மின்சாரக் கோபுரமொன்று நிர்மாணிக்கப்பட்டமைக்காக திருமதி. மாரிமுத்து சண்முகத்திற்கு நட்டஈட்டுத் தொகை வழங்கப்படுவதை விதந்துரைத்து இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் DGM (P&HM-R1) GEN இலக்கமும் 2011.07.07 ஆம் திகதியும் கொண்ட கடிதம் மூலம் வவுனியாவில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிரதான பொறியியலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) குடியமர்ந்திருந்த வீட்டினை இழந்து நிர்க்கதிநிலைக்கு உள்ளாகியுள்ள திருமதி. சண்முகத்திற்கு வழங்கவேண்டிய நட்டஈட்டுத் தொகை இற்றைவரை வழங்கப்படாமைக்கான காரணம் யாது;

(ii) மேற்படி நட்டஈட்டுத் தொகையினை தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4743/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கை மின்சார சபைக்கு திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை மின்சார சபை வர்த்தக வங்கிகளிலிருந்து கடன் பெற்றுக் கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) இலாபமோ அல்லது நட்டமோ இல்லாத நிலையில் இலங்கை மின்சார சபையை பேணிவருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4811/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடப்பு செல்வபுரம் கிராமத்தின் வீதி அடிக்கடி பழுதடைந்து மண் மேடு போன்ற நிலைக்கு உள்ளாகின்றதென்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களும் நோயாளர்களும் மேற்படி வீதியின் ஊடாக பயணம் செய்கின்றபோது பல்வேறு சிரமங்களுக்கும் முகம் கொடுக்கின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிலைமையை கருத்திற்கொண்டு இவ்வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4849/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒவ்வொரு மூன்று முதல் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் 'குடும்ப வருமான செலவின அளவீடு' என அழைக்கப்படும் அறிக்கை ஒன்றை பிரசுரிப்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில்,

(i) 2006/07, 2009 மற்றும் 2012/13 ஆகிய ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் மாதம் ஒன்றுக்கான சராசரி (பெயரளவிலான) குடும்ப வருமானம்;

(ii) 2006/07, 2009/10 மற்றும் 2012/13 ஆகிய ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் மாதம் ஒன்றுக்கான சராசரி (மெய்யான) குடும்ப வருமானத்தை பொருத்தமான அடிப்படை ஆண்டின் பிரகாரமும் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4904/ '14

கௌரவ அஜித் மான்னபெரும,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் வெலிசர, இலங்கை கடற்படை ஆஸ்பத்திரிக்கு யப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட கதிர்வீச்சு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) இதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) இதனை இறக்குமதி செய்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(v) மேற்படி இயந்திரத்தை கடற்படை ஆஸ்பத்திரி பொறுப்பேற்பதற்கு முன்னர் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தி அங்கீகாரம் பெற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனின், மேற்படி அங்கீகாரத்தை வழங்கியவர்களின் பெயர், பதவிகள் யாவை என்பதையும்;

(vii) கதிர்வீச்சு இயந்திரம் மற்றும் அதன் செயற்பாடு தொடர்பில் இலங்கை கடற்படை குறிப்பிட்ட நிறுவனத்துடன் உத்தரவாதமளிக்கும் கடப்பாட்டைக் கொண்டிருந்ததா என்பதையும்;

(viii) ஆமெனின், மேற்படி உத்தரவாத காலகட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேலே குறிப்பிடப்பட்ட இயந்திரம் இயங்கும் நிலையில் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல் அது செயலிழந்த திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி இயந்திரம் உத்தரவாத காலத்தினுள் செயலிழந்திருப்பின், குறிப்பிட்ட நிறுவனத்தின் ஊடாக இதனை இலவசமாக திருத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி இயந்திரத்தைக் கொள்வனவு செய்கின்றபோது முறைகேடுகள் நடைபெற்றுள்ளதா;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4949/ '14

கௌரவ சுஜீவ சேனசிங்க,—பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கொலொன்னாவை எண்ணெய் முழுநிறை கருவிகல அமைவிடத்தில் (CPSTL) 2/3 பங்கு இந்தியன் எண்ணெய் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கொலொன்னாவையில் அமைந்துள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுற்றுபுறத்திலிருந்து சுவீகரிக்கப்பட்டுள்ள 80 ஏக்கர் காணியை இந்தியன் எண்ணெய் கம்பனிக்கு இலவசமாக வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2672/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புகையிரதக் கடவைகளற்ற பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகளில் 2010ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள்,

(i) இடம்பெற்றுள்ள புகையிரத விபத்துக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இடம்பெற்ற மேற்படி விபத்துக்களினால் மரணமடைந்தோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) காயமடைந்தோரின் எண்ணிக்கை யாதென்பதையும்

தனித்தனியாக ஆண்டுவாரியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகள் காரணமாக இடம்பெறுகின்ற விபத்துக்களினால் சேதம் ஏற்படுபவர்களுக்கு விசேட இழப்பீட்டுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி இழப்பீட்டுத் திட்டம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3251/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை கிரிக்கட் தொடர்பில்,

(i) 2012ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) இந்நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3835/ '13

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹபராதூவ, லனுமோதரவில் வதியும் திரு. ஏ. பியல் ஹேமந்த 1991.01.15 ஆம் திகதி பொலிஸ் சேவையில் இணைந்து நாட்டின் பல பிரதேசங்களிலும் கடமையாற்றியுள்ள ஓர் உத்தியோகத்தராவார் என்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் களனிய பிரிவின் பேலியகொட பொலிஸ் நிலையத்துக்கு இணைக்கப்பட்டு கடமையாற்றியுள்ளார் என்பதையும்;

(iii) இவர் தனது சேவைக் காலத்தில் வெளிக்காட்டியுள்ள பல்வேறு திறமைகளுக்காக பணப் பரிசுகளையும் பெற்றுள்ள ஓர் உத்தியோகத்தராவார் என்பதையும்;

(iv) 2011.04.13 ஆம் திகதியன்று கடமையை முடித்துவிட்டு வீடு செல்லும் போது அரவம் தீண்டியதால் சில மாதங்கள் மூர்ச்சை நிலையில் இருந்தமையினால் திரு ஹேமந்தவுக்கு கடமைக்கு சமூகமளிக்கவோ அல்லது தனது சுகயீன நிலைமை சம்பந்தமாக சேவை நிலையத்துக்கு அறிவிக்கவோ முடியவில்லை என்பதையும்;

(v) இந்த நிலைமையின் கீழ் 2011.05.14 ஆம் திகதி முதல் இவர் பதவி விட்டு நீங்கியவராக கருதப்பட்டு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. ஹேமந்த பொலிஸ் சேவையில் ஈடுபட்டிருந்த போது பல்வேறு திறமைகளை வெளிக்காட்டிய ஓர் உத்தியோகத்தர் என்பதால் இவரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 யூலை 25, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2673/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்லோயா தேசிய வனப்பூங்காவின் எல்லையில் அமைந்துள்ள, வன பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான நில்கல வனத்தில் 505 ஏக்கர் துப்பரவு செய்யப்பட்டு, அக்காணியில் மல்தம்அம்பே, பிட்டகும்புர, புளுபிட்டிய, சேரவ மற்றும் பேரன ஆகிய கிராமங்களில் வசிக்கும் 400 குடும்பங்களை குடியமர்த்தும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி கருத்திட்டத்தால் நில்கல வன ஒதுக்கத்தின் இருப்பிற்கும் உயிர் பல்வகைத்தன்மைக்கும் ஏற்படும் பாதிப்பை தடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) வனசீவராசிகள் பணிப்பாளர் தலைமை அதிபதியின் எழுத்துமூல முன்னனுமதியின்றி மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதானது வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்திற்கு முரணான சட்ட விரோத நடவடிக்கையென்பதால் அதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3252/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தொடர்பில்,

(i) 2012ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) இச்சபையில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3836/ '13

கௌரவ புத்திக பதிரண,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு அம்பாறையில் நடத்தப்பட்ட 'தயட்ட கிருள' கண்காட்சியின்போது சமூக சேவைகள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட காட்சிக் கூடத்திற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கண்காட்சி நடைபெற்ற கால எல்லைக்கு ஏற்புடையதாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளம், மேலதிக நேரப் படிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 'தயட்ட கிருள' கண்காட்சியின்போது கடமையிலீடுபட்டிருந்த மேற்படி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கென செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 'தயட்ட கிருள' கண்காட்சி வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி காட்சிக் கூடங்கள் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் யாவை என்பதையும்;

(ii) மக்கள் நீண்ட காலம் பயன்படுத்தக் கூடிய வகையிலான கட்டடங்கள் மேற்படி காட்சிக் கூடங்களின் பொருட்டு நிர்மாணிக்கப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், குறித்த கட்டடங்கள் தற்போது எப்பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4151/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆளொருவரை ஆட்சேர்க்கும் பொருட்டு 2013 மார்ச் மாதம் 18 ஆந் திகதி நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்பட்டதா;

(ii) அந்த நேர்முகப்பரீட்சையின் நோக்கம், மேற்கூறிய பதவிக்காக ஆளொருவரை நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்வதா அல்லது தற்காலிக அடிப்படையில் சேர்த்துக் கொள்வதா;

(iii) அப் பதவிக்குத் தேவையான தகைமைகள் யாவை;

(iv) இதன் சார்பில் தோற்றிய ஒவ்வொரு நபரினதும் பெயர், முகவரி மற்றும் தகைமைகள் வெவ்வேறாக யாவை;

(v) மேற்கூறியவர்களில் அப் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டவரின் பெயர் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை;

(vi) மேற்படி நபர் ஆட்சேர்க்கப்பட்டது நிரந்தர அடிப்படையிலா அல்லது தற்காலிக அடிப்படையிலா;

(vii) தற்காலிக அடிப்படையில் இவரை ஆட்சேர்த்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4177/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்னேரியா ஒதுக்கத்திலும் அதனைச் சுற்றி அமைந்துள்ள கட்டுகெலியாவ, ஹலுவெவ, ரத்மலே மற்றும் ஹபரன ஆகிய பிரதேசங்களிலும் சரளைக் கல் வெட்டுதல் நடைபெறுகின்றதென்பதை அறிவாரா என்வதையும்;

(ii) மேற்படி ஒதுக்கப் பிரதேசத்துக்குப் பிரவேசிப்பதற்கும் சரளைக் கல் வெட்டுவதற்கும் அனுமதி வழங்கிய தரப்பினர் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி சரளைக் கல் வெட்டுவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) சரளைக் கல் வெட்டுதல் நடைபெறும் மேற்குறிப்பிட்ட பிரதேசங்கள் உரித்தாகின்ற பிரதேசச் செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4631/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவி செத லொத்தரை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயங்கள் யாவை;

(ii) மேற்படி லொத்தர் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டத்திற்கமைய கமக்காரர் ஒய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்த கமக்காரரொருவர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு கொண்டிருக்கவேண்டிய குறைந்தபட்சத் தகைமைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கொவி செத லொத்தரின் ஆரம்பத்திலிருந்து இற்றைவரை மேற்படி லொத்தர் நிதியத்திலிருந்து கமக்காரர் ஒய்வூதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதை ஆண்டுவாரியாக தனித்தனியாகவும்;

(ii) இன்றளவில் தேவையான வயதெல்லையை நிறைவுசெய்துள்ளதன் பேரில் கமக்காரர் ஒய்வூதியம் செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள கமக்காரர்களின் எண்ணிக்கை யாதென்பதை ஆண்டுவாரியாக தனித்தனியாகவும்

அவர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4713/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாணத்தில், மாத்தளை கல்வி வலயத்திற்குரிய, மா/துல்லாவ கல்லூரியில் உப ஆசிரியராகச் சேவையாற்றிக்கொண்டிருந்த, திரு. ஏ.எல்.எம். நசீஸ் வெளிநாட்டு லீவு பெறுவதற்காக சமர்ப்பித்திருந்த பொது 126 மாதிரிப் படிவத்திற்கமைய, மாத்தளை, வலயக் கல்விப் பணிப்பாளரின் மா/குருஆ/7/281 ஆம் இலக்க 1989.06.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 1987.04.01 ஆம் திகதி முதல் 1992.03.31 ஆம் திகதி வரை சம்பளமற்ற வெளிநாட்டு லீவு அங்கீகரிக்கப்படுதல் விதந்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மாத்தளை வலயக் கல்விப் பணிப்பாளர் மா/குருஆ/4/53 ஆம் இலக்க 2007.11.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திரு. நசீஸின் 15 ஆண்டு கால திருப்திகரமான சேவையைக் கவனத்திற்கொண்டு இவரை மீண்டும் சேவையில் அமர்த்துதல் பொருத்துமாகுமென மத்திய மாகாண கல்விப் பணிப்பாளருக்கு விதந்துரைத்துள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கல்வித் திணைக்களத்தின் உள்ளகத் தவறொன்றினால் பதவி விட்டு நீங்கியமைக்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளமையின் காரணமாக நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ள திரு. நசீஸை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு அல்லது ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன் ?

4755/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள ஒட்டுமொத்த தென்னைத் தோட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை குருநாகல் மாவட்டத்தின் தேங்காய் உற்பத்தி வருடாந்தம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4850/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஆளொருவர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதமொன்றுக்கு அவசியமான குறைந்தபட்ச செலவினத்தின் அடிப்படையில் மாதந்தோறும் மாவட்ட வறுமைக் கோட்டை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிடுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கொழும்பு மாவட்டம் பற்றிய கிடைக்கக்கூடியதாகவுள்ள மிகவும் அண்மைய உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டையும்;

(ii) மேற்கூறிய வறுமைக்கோட்டை கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்டுள்ள "அடிப்படைத் தேவைகள்" யாதென்பதுயும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4905/ ’14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் இப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களில் மாணவர் உதவித்தொகைக்கு உரிமை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மாணவர் உதவித்தொகை உரித்தான மாணவர் ஒருவருக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்ற மாணவர் உதவித்தொகையின் பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்பு றோயல் கல்லூரி, ஆனந்தாக் கல்லூரி மற்றும் விசாகா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் 6 ஆம் ஆண்டுக்கு தகுதி பெற்று, அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4950/ ’14

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘பி வீ ஒயில்’ எனும் சிங்கப்பூர் கம்பனியுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகிகள் 2011.10.07 ஆம் திகதி மற்றும் 2012.01.25 ஆம் திகதி ஆகிய இரு சந்தர்ப்பங்களிலும் கைச்சாத்திட்ட ஊழல் மிகுந்த உடன்படிக்கையை மீண்டும் புதுப்பிக்க தயாராகின்றனர் என்பதையும்;

(ii) ஆறு மாத காலங்களுக்கு இரண்டு இலட்சத்து நாற்பது ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோல் இறக்குமதி செய்வதற்கு இக் கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ரூபா 116 கோடி நட்டமேற்பட்டதென்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டில் இவ்வுடன்படிக்கையை மீண்டும் கைச்சாத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளதென தொழிற் சங்கங்கள் குற்றம் காட்டுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஊழல்கள் காரணமாக நாளுக்கு நாள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைகின்றது என்பதையும்;

(ii) இந் நட்டத்தை ஈடுசெய்ய அடிக்கடி எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2674/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிங்கப்பூரின் 'பிரிட்டிஷ் பெற்றோலியம்' நிறுவனத்திலிருந்து கடந்த காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 'தரமான விமான எரிபொருள்' உடன் பிறிதொரு கொள்கலனில் 7500 மெட்ரிக் தொன் 'தரம் குறைவான விமான எரிபொருள்' இறக்குமதி செய்யப்பட்டதா என்பதையும்;

(ii) விமானங்களுக்கான எரிபொருள் இறக்குமதியின் போது இடம்பெற்றுள்ள மேற்படி முறைகேடு காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட நட்டத்தின் பெறுமதி ரூபாய்களிலும் டொலர்களிலும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி முறைகேடு தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்ட எரிபொருள் இறக்குமதியின் பின்னர் 'பிரிட்டிஷ் பெற்றோலியம்' நிறுவனத்திலிருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்படலாகாதென கேள்விப்பத்திர குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3270/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்று உள்ளவாறு நாட்டில் உள்ள சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையையும்;

(ii) 2011, 2012 ஆகிய வருடங்களில் டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையையும்;

(iii) அத்தகைய உதவிக்கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கருத்திற்கொள்ளப்பட்ட மூலப் பிரமாணங்களையும்;

(iv) 2010, 2011, 2012 ஆகிய வருடங்களில் மாதாந்தம் மற்றும் வருடாந்தம் பெற்றுக்கொண்ட உதவித் தொகைகளின் அடிப்படையில் சமுர்த்தி கிடைக்கப்பெறும் குடும்பங்களின் விபரங்களையும் வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) விலைக்கு வாங்கும் ஆற்றல் அல்லது கொள்வனவு செய்யும் ஆற்றல் அல்லது பணவீக்கம் சார் போக்குகள் தொடர்பாக சமுர்த்தி பெறுநர்களுக்கு நிதியங்களின் மீள் ஒதுக்கீடொன்று உள்ளதா என்பதை வஅர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3918/ '13

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000-2005 lஆம் கட்ட கண்டி பெரும்பாக, கண்டி வடக்கு, மற்றும் ஹாரிஸ்பத்துவ, கொஹாகொட நீர் பம்பி நிலையங்களுக்கு மகாவலி கங்கையிலிருந்து நாளொன்றுக்கு பெற்றுக்கொள்ளப்படும் நீரின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நீர் பம்பி நிலையங்களிலிருந்து குடிநீரை பெற்றுக்கொள்கின்ற தனியார் வீடுகள், அரசாங்க வீடுகள், பாடசாலைகள் உள்ளடங்களாக அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் தொழிற்சாலைகள், வணக்கஸ்தலங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) கொஹாகொட குப்பை மேட்டுக்கு அண்மையில் அமைந்துள்ள மேற்படி நீர் பம்பி நிலையத்தின் ஊடாக விநியோகிக்கப்படுகின்ற குடிநீர் மூலம் பாதகமான பல இராசயன பதார்த்தங்கள் மனித உடலை சென்றடைகின்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) ஆமெனில், இந்நிலைமையை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4152/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணம் எவ்வாறு பெறப்பட்டது;

(iii) அமைச்சின் நிதியங்களுக்கு மேலதிகமாக வேறு நிறுவனங்களிலிருந்து இதற்காகப் பணம் பெறப்பட்டதா;

(iv) ஆமெனில், அந்த நிறுவனங்களும் பெற்றுக் கொள்ளப்பட்ட பணத் தொகைகளும் யாவை;

(v) தேசிய இரத்தினக்கல் ஆபரணங்கள் அதிகாரசபை, அரச மரக் கூட்டுத்தாபனம், புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் ஆகிய நிறுவனங்களிலிருந்து உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ரூபா 70 இலட்சம் வீதம் பெற்றுக் கொள்ளப்பட்டதா;

(vi) இன்றேல், அவ்வாறு பணம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதா

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?